# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **O.S.NO.23/2020** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **பி.சா- 02 (DW- 02 )** |
| **பெயர்** | **:-** | **அலமேலு க/பெ. செல்வம்** |
| **தேதி** | **:-** | **14-07-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 45 ஆண்டுகள் இருக்கும். கணவர் சிங்கிபுரம். திருமணத்திற்குபிறகு என் தகப்பனர் சிங்கிபுரம் ஊரில் எனக்கு நிலம் கிரயம் வாங்கிக் கொடுத்தாரா இல்லை. 10.10.1988-ஆம் தேதியன்று புல எண் 1/6, 186/2 ஆகியவற்றில் 2.04.50 ஏக்கர் நிலம் என் பெயரில் கிரயம் ஆகியுள்ளது என்றால் சரிதான். அதை என் மாமனார் அவர் பெயரில் இருந்ததை எனக்கு கிரயம் கொடுத்தார். அந்த பத்திரத்தில் என் தகப்பனார் கையெழுத்து போட்டு இருக்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. என் தகப்பனார் அதில் சான்றொப்பம் இட்டுள்ளார் என்றும் அவர்தான் பணம் கொடுத்து எனக்கு வாங்கிக் கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

எனக்கு 02 மகன்கள். என் கணவரும் மகன்களும் பாகப்பிரிவினை செய்துகொண்டனர். பாகப்பிரிவினை நடந்தபோது என் மகன்கள் இளவர்களாக இருந்தனர் என்றால் சரிதான். காப்பாளராக நான் நியமிக்கப் -பட்டேன் என்றால் சரிதான். என் கணவருக்கு சொத்து ஒதுக்கப்படவில்லை.

பணம் கொடுக்கப்பட்டது. பாகப்பிரிவினையில் என் மகன்களுக்கு கிடைத்த சொத்து என் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து ஆகியவற்றை நான்தான் அனுபோகம் செய்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன்கள் உரிமை வயதை அடைந்ததும் விற்றுவிட்டனர். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் கணவர் இருக்கிறார். நான் இதுவரை சிங்கிபுரம் ஊரில்தான் வசிக்கிறேன் என்றும் என் தகப்பனார் இறந்தபிறகு தாயாருடன் சேர்ந்துக் கொண்டு இந்த வழக்கை பொய்யாக நடத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் 25 ஆண்டுகளாக என் பெற்றோருடன்தான் வசிக்கிறேன்.

என் தாயார் பெயரில் இருந்த சொத்தை என் தாயார், தகப்பனார், அவருடைய பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து விற்றோம் என்றால் சரிதான். விற்ற பணத்தை அண்ணன் எடுத்துக்கொண்டார். நான் இந்த விவரத்தை இதற்குமுன் சொல்லவில்லை. அந்த சொத்துதான் பொதுக் குடும்பச் சொத்து என்றும் அதை விற்று நாங்கள் பிரித்துக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. என் அண்ணிடம் கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தில் பாகம் கேட்டு நான் வழக்கு போடவில்லை. விற்ற சொத்தை தவிற வேறு பொதுக் குடும்பச் சொத்துக்கள் இல்லை என்றும் மற்றவை அவரரவரின் தனிச் சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

என் அப்பா, அண்ணன், தாயார் ஆகியோர் 11.09.1995-ஆம் தேதியன்று பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அது எங்களுக்கு தெரியும். வழக்குச் சொத்து தனிப்பட்ட சொத்து என்றும் அதில் பாகம் கேட்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11.06.1982-ஆம் தேதியன்று ஏற்பட்டதாக சொல்லப்படும் பாகப்பிரிவினைப் பத்திரம் எதுவும் நான் சொல்வதுபோன்று ஏற்படவில்லை என்றும் அது பரிவர்த்தனை பத்திரம் என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் அவரது பேத்தி பெயரில் நிறைவேற்றிய அறுதியாவணம் செல்லும் என்றும் அதில் நாங்கள் பாகம் கேட்க உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.